பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

நாவாந்துறைப் படிப்பகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.
(இ/1870)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 13 வெள்ளிக்கிழமை 27-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 128

## அக்கினிச்சுவாலை-1 நடவடிக்கை: முறியடிப்பில் 20 புலிகள் களப்பலி!

சிறிலங்காஇராணுவம் தனதுமுழுவளங்களையும் பயன்படுத்தி பெரும் எடுப்பில் மும்முனையாகமுன்னேற மேற்கொண்ட முயற்சியை விடுதலைப்புலிகளின் விசேட படையணி முறியடித்துவிட்ட தாக விடுதலைப்புலிகள் நேற்று வெளியிட்ட யுத்த முனை அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினரின் முன்னேற்ற முயற்சியை எதிர்த்துப் போராடிய விடுதலைப் புலிகளில் 20 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிளாலி, எழுதுமட்டுவாழ், (8ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு ஆஸ்பத்திரியில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள இரத்த வங்கியில் சகல வகையான இரத்தங்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக இரத்த வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவத்தினரால்நேற்று முன்தினம் அதிகாலை ஆரம்பிக்கப்பட்டுள்ள ''அக்கினி சுவாலை'' படை நடவடிக்கையின் போது படுகாயமடைந்த படையினருக்கு இரத்தம் தேவைப்படுவதாகவும் எனினும் இரத்த வங்கியில் போதியளவு இரத்தம் இல்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனை அடுத்து இரத்தம் தேவை என இரத்த வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது. (வ)

## சமாதான முயற்சிகளுக்கு நாம் மாறுபட்டவர்கள் அல்ல

# அரசாங்கம் யுத்த நிறுத்தம் செய்தால் புலிகள் யுத்த நிறுத்தத்திற்கு தயார்!

### ஆயர்களிடம் சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(வவுனியா நிருபர் ரி.விவேகராசா)

**சிறிலங்கா அரசு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு யுத்தநிறுத்தம் செய்து அதனை அமுல்படுத்தித் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துமானால், தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தநிறுத்தம் செய்யத் தயாராக உள்ளார்கள்.**

**இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் தன்னைச் சந்தித்த ஆயர்குழுவிடம் தெரிவித்துள்ளார்.**

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்குச்சென்ற ஆயர் குழுவினர் மல்லாவியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து மூன்று மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இப்பேச்சு வார்த்தையின் போது சு.ப. தமிழ்ச்செல்வன் யுத்த நிறுத்தம் தொடர்பாக மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாக வவுனியா திரும்பிய திருமலை, மட்டு நகர் மறை மாவட்ட ஆயர் அதி வண். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை → 8ஆம் பக்கம் பார்க்க

## சேதமடைந்த யுத்தடாங்கி பலாலித் தளத்திற்கு

''அக்கினிச் சுவாலை -1'' இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட யுத்த டாங்கி ஒன்று நேற்று மாலைபலாலிபடைத் தளத்திற்கு இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப் பட்டது.

பருத்தித்துறைவீதிவழியாக இந்த யுத்த டாங்கிஇராணுவ பாரந்தாங்கி வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டதை தெருவோரத்தில் மக்கள் நின்றுபார்த்தனர். (ம)

## தீர்மானங்களை எடுப்பது அரசு-புலிகளுடையதே

### எரிக்சோல்ஹெய்ம்

[மட்டக்களப்பு]

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் பேச்சு வார்த்தை யொன்று நடைபெறும்போது அதில் கலந்து கொள்ளும் ஏனைய தரப்புக்கள் தொடர்பாக அரசும் விடுதலைப்புலிகளும் தான் தீர்மானிக்கவேண்டும்என்று → 8ஆம் பக்கம் பார்க்க

## அக்கினிச்சுவாலை -1 நடவடிக்கை ஆனையிறவு வரை தொடரும்

### பிரிகேடியர் சனத்கருணாரட்ண தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறிலங்கா இராணுவத்தினரால் தற்போதுமேற்கொள்ளப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கை 'அக்கினிச் சுவாலை —01' ஒரு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவநடவடிக்கை அல்ல. அது ஒரு தொடர் இராணுவ நடவடிக்கையாகும். ஜனவரி 9ல் மேற்கொள்ளப்பட்ட கினிகிர இராணுவ நடவடிக்கையின் போது புலிகளிடம் இழந்த பகுதிகளை மீட்கும்வரை இப்படை நடவடிக்கை தொடரும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத்கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளினால் ஓயாத அலைகள் மூலம் கைப்பற்றப்பட்ட ஆனையிறவை மீட்கும் நோக்குடனேயே அக்கினிச்சுவாலை-1 படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் இலக்கை அடையும்வரை இந்த இராணுவ நடவடிக்கை தொடரும் எனவும் நேற்றைய நடவடிக்கை மூலம் இராணுவம் தனது இலக்கை அடைந்து ஆனையிறவை நோக்கி இரண்டு கிலோமீற்றர் தூரம் முன்னேறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். [வ]

## வீட்டில்வீழ்ந்தஷெல்லுக்கு இருஇளைஞர்கள்பலி

(வவுனியா)

பூநகரிப் பகுதி நோக்கி படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் இரு இளைஞர்கள் பலியாயினர்.

இச் சம்பவத்தில் ஜெயக்குமார் (வயது 20). சுபாஸ்கரன் (வயது 17) ஆகிய இருவருமே பலியாகினர். இதே வேளை நடராஜா என்பவர் இச்ஷெல்வீச்சினால் தனது இடதுகாலை இழந்துள்ளார்.

படையினரால் ஏவப்பட்ட ஷெல் வீடொன்றின் மீது வீழ்ந்ததினாலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டது. (ந-5)

## அக்கினிச் சுவாலை-1 நடவடிக்கை 87படையினர்பலி; 248பேர்காயம்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப்புலிகள் வசமுள்ள ஆனையிறவுப் பெருந்தளத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக மேற்கொண்ட அக்கினிச் சுவாலை 1 பாரியஇராணுவ நடவடிக்கையின் போது87 இராணுவம்கொல்லப்பட்டுள்ளதாகவும் 248பேர்படுகாயமடைந்திருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு கடைசியாக வெளியிட்ட அறிக்கைஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப் படைநடவடிக்கையின் போது கொல்லப்பட்ட இராணுவத்தினதும் காயமடைந்த இராணுவத்தினதும் எண்ணிக்கை பலமடங்காக அதிகரித்திருப்பதாகவும் பக்கசார்பற்ற செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதுஇவ்வாறுஇருக்க யுத்த முனையில் தற்போது அமைதி நிலவுவதாகவும் நேற்றுமுன்தினம் அதிகாலைஆரம்பிக்கப்பட்ட அக்கினிச்சுவாலை-1 இராணுவநடவடிக்கைநேற்றுமுன்தினம் இரவுவரைநீடித்ததாகவும் இதன்போது புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் படையினர் தம் நிலைகளைப் பலப்படுத்தி வருவதாகவும் இராணுவத் → 8ஆம் பக்கம் பார்க்க

## யாழ்வைத்தியசாலையில் 7 சடலங்கள்ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கிளாலி மற்றும்எழுதுமட்டுவாழ் பகுதிகளில்இடம்பெற்ற மோதல்களின் போது கைப்பற்றப்பட்ட ஏழு சடலங்கள் நேற்று யாழ் போதனாவைத்தியசாலையில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டது.

நான்கு ஆண்களும் மூன்று பெண்களும் அடங்கும் இவ் ஏழு சடலங்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக விடுதலைப் புலிகளிடம் இன்று ஒப்படைக்கப் படுமெனத் தெரிய வருகிறது. (ந-10-4)

## சிறு விளம்பரம்

### பொது அறிவு

SL S - பரீட்சைக்கு வழி காட்டி விற்பனையாகின்றது. ஆசிரியர் :- V A. சிவராசா B A, B phil, Dip-in-Ed கிடைக்குமிடம்; - மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம்; (கி-1884)

## ஹொக்கிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்று வரும் விளையாட்டு விழா நிகழ்வுத்தொடரில் ஹொக்கிப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இவ் இறுதிப் போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணி சம்பியனாக தெரிவானது.

இரண்டாம் இடத்தினை சங்கானை பிரதேசசபை தட்டிக் கொண்டது. (உ-10)

## கும்பாபிஷேகம்

(மந்திகை)

துன்னாலை கிழக்கு வெல்லிக்கந்தோட்ட பிள்ளையார் கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டாமாக கும்பாபிசேகவிழா இன்றுகாலை 9.30 மணிமுதல் 10 30 மணிவரை நடைபெறவுள்ளது. (உ-39)

## தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவரை யாழ் மாவட்ட நீதிபதி 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறும் தவறின் 6 மாத கடூழியச் சிறைத் தண்டனைவிதிக்கப்படுமெனவும் உத்தரவு பிறப்பித்தார்.

மேற்படி பெண்மணிகசிப்பு உற்பத்திதொடர்பாகஇதற்கு முன்பும் இருதடவைகள்கைது செய்யப்பட்டுமன்னிப்புவழங்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது; (உ-6)

## ஆலய உற்சவம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கொடியேற்றத்துடன்ஆரம்பமாகும் அலங்கார உற்சவம் 10 தினங்கள் இடம்பெறவுள்ளன. [உ-75]


## இலங்கை மின்சார சபை யாழ் பிரதேசம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண வளாக வீதியில் உள்ள பிரதான மின் நிலையத்தில் திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதனால் இன்று 27. 04. 2001 வெள்ளிக் கிழமை காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட இடங்களுக்கு மின்சாரம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் பூர்த்தியடைந்ததும் குறிப்பிட்டநேரத்திற்கு முன்பதாகமின் வழங்கப்படும் என்பதனையும் பாவனையாளர்கட்கு இத்தால் அறியத்தருகின்றேன்,

இதன் காரணமாக மின்பாவனையாளர்களிற்கு ஏற்படும சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றேன்;

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்;

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
இலங்கை மின்சார சபை;

[கி-1885]


# தந்தைசெல்வாவின்வரலாற்றைபாட புத்தகங்களில் சேர்க்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

எம்மவர்கள் பலர் பாராளுமன்றக் கதிரைகளில் நாட்டம் கொண்டு நின்ற வேளையில் எமக்காக குரல் கொடுத்த தனிப்பெரும் தலைவர் தந்தை செல்வா.

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா சதுக்கத்தில் தென்னிந்திய திருச்சபை ஆயர் கலாநிதி ஜெபநேசன் தலைமையில் இடம் பெற்ற தந்தைசெல்வாநினைவஞ்சலிக் கூட்டத்தில் ஆசிரியர் ஹமீட் தெரிவித்தார்.

நினைவஞ்சலிக் கூட்டத்தில் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சேனாதிராஜா, சிவமகாராஜா ஆகியோரும் பேராசிரியர் க. சிற்றம்பலம் கூட்டணியின் மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் பொத மக்களும் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் ஹமீட் மேலும் அங்கு தொடர்கையில், காலியிலும் புத்தளத்திலும், முஸ்லிம்கள் தாக்கப்படும் போது எமது அரசியல் தலைவர்கள் அனைவரும்பார்த்துக்கொண்டிருக்க எம் இனத்திற்காகஓங்கிக் குரல்கொடுத்தவர்தந்தை செல்வா.

அவரை தமிழர்களுடைய தலைவர்என்று மட்டுமல்லாது தமிழ் பேசும் முஸ்லிம்களுடைய தலைவரென்றும் கூற வேண்டும் என்றார்.

மேலும் இன்றைய இளந்தலை முறையினருக்குதந்தை செல்வா என்றால்யார்? அவர் என்ன செய்தார்? என்பது தெரியாதுஉள்ளது.

எனவே தந்தை செல்வாவினுடையவரலாற்றினைமாணவர் அறிவிற்கு ஏற்ப பாடப் புத்தகங்களில் கொண்டு வர வேண்டுமெனவும் தலைவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நினைவாலயம் அமைக்க வேண்டும் எனவும் அங்கிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை ஒன்றினை விடுத்தார்.

அத்துடன், வட பகுதிமுஸ்லிம்கள் அன்று தொடக்கம் இன்று வரை தென்பகுதி அரசியல் வாதிகளையோ ஏனையோரையோ நம்பியிருக்கவில்லை. அவர்கள் வடபகுதி தமிழர்களை மட்டுமே நம்பியிருக்கிறார்கள்.

அவ்வாறான முஸ்லிம்கள் இன்று அநாதைகளாக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்களின் இன்றைய நிலையைஇங்கிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்திலெடுக்க வேண்டும். என மிகவும் உணர்வு பூர்வமாகக்கேட்டுக் கொண்டார். (உ-2)

### கடந்த கால போர் அனர்த்தங்களால்

# ஆயிரக்கணக்கான இளம் வயதினர் அவயவங்களை இழந்துள்ளனர்

### ஜெய்ப்பூர் நிறுவனம் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் யுத்த நடவடிக்கைகளில் மிதிவெடி காரணமாகக் கால் இழப்போரே அதிகம் என ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலையின் புள்ளி விபரங்களினின்றும் அறிய முடிகிறது.

87 ஆம் ஆண்டில் இருந்து கடந்த மாதம் வரையிலான தரவுகளின்படி மொத்தமாக யுத்த அனர்த்தங்களால் யாழ்ப்பாணத்தில் கால்களை இழந்தோர் தொகை 2 ஆயிரத்து 176பேர் எனவும் இவற்றில் ஆயிரத்து 153 பேர் மிதிவெடியினால் தமது கால்களை இழந்தவர்கள் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது;

மேலும் குண்டுவீச்சுகளில் 134 பேரும், ஷெல்லினால் 300 பேரும் துப்பாக்கிச் சூட்டினால் 115 பேரும் ஏனைய காரணங்களினால் மிகுதிப் பேரும் கால்களை இழந்துள்ளனர்.

யுத்த அனர்த்தங்களினால் கால்களை இழந்தவர்களில் ஆயிரத்து 744 பேர் ஆண்கள் எனவும் 402 பேர் பெண்கள் எனவும் அப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன;

இவர்களில் 50 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் 11-30 வயதிற்கு இடைப்பட்டவர்கள்.

மேற்கூறிய கால எல்லையில் கைகளை இழந்தவர்கள் தொகை 120 எனவும் இதில் தமது கைகளை இழந்துள்ள 99 ஆண்களும் 18 பெண்களும் யுத்தத்தினாலேயே கைகளை இழந்துள்ளதாகவும் அப் புள்ளிவிபரங்கள் மேலும் தெரிவிக்கின்றன; (உ-52)

## ஆசிரியர் சுயவிபரக் கோவை தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

1999/2000 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யா.கல்வி வலயத்தில் ஆசிரியர் நியமனம் பெற்றவர்களின் சுயவிபரக் கோவைகளைத் தயாரிக்கும் வகையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு வலயக்கல்விப்பணிமனையில் அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன;

அழைப்புக்கடிதங்கள் கிடைக்கப்பெறாதோரையும் வரும் மாதம் 2 ஆம் திகதி யா·வலயக்கல்விப்பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. உ-10)

## 420 தபால் பொதிகள் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பலில் குடாநாட்டிற்கான 420 வெளியூர்த் தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இக் கப்பலில் குடாநாட்டில் இருந்து 60 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளன; (உ-10)

## விவசாய குழுக் கூட்டம்

[ஆவரங்கால்]

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான இம் மாத விவசாயக் குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மு. ப 11 30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளதால், தொடர்புடைய சகலரையும் உரிய நேரத்திற்கு சமுகம் கொடுக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. [உ-57]

## பொதுக் கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெற இருந்த சங்குவேலி சனசமூக நிலையத்தின் நடப்பாண்டுக்கான நிர்வாகத் தெரிவுப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத கரணத்தினால் அடுத்த மாதம் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்துள்ளார். [உ-8]

## இடம் மாற்றம்

[ஏழாலை]

இலங்கை மின்சார சபையின் வேலணைக்கிளையில் கடமையாற்றி வந்த நால்வர் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இவர்களில் இருவர் சுன்னாகம் மின்சார சபைக்கும், மற்றையோர் வட்டுக்கோட்டை மின்சார சபைக்கும் இம்மாதம் 18 ஆம் திகதி முதல் இடமாற்றம் பெற்றுள்ளனர்; (உ-12)

## நிர்வாகசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரச பொதுச்சேவை கல்வி சாரா ஊழியர்கள் சங்க (கல்விப் பிரிவு) புதிய நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9. 30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது; (உ)

## பெறுபேறுகள் கிடைத்தன

(மந்திகை)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இருந்து கடந்தவருடம்க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றிய நால்வருடைய பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியான காலத்தில்வரத் தவறிய மேற்படி பரீட்சைப் பெறுபேற்றுக்குரியவர்களை தமது பெறுபேறுகளை வந்து பார்வையிடுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-23)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் அடுத்ததாக கம்போடியாவில் இடம் பெற்ற உள்நாட்டுப் படு கொலைகளை சித்திரிக்கும் படமான ',த கில்லிங் பீல்ட்ஸ்'' நாளை சனிக் கிழமை மு.ப 10.00 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும். ஆர்வலர்கள் எவரும் கலந்து பயன் பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்; (உ)

### பாடநூல்களை

## பெற்றுக் கொள்க

(ஆவரங்கால்)

இதுவரை பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படாத பாட நூல்கள் பலவும் வந்தடைந்துள்ளதால், புதிய பாடத்திட்டத்திற்கமைவான பாடநூல்களை உடனடியாகப் பெற்று பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்குமாறு, கோப்பாய் கோட்டத்தில் அடங்கும் பாடசாலை அதிபர்களை இன்று காலை 9 மணி தொடக்கம் மதியம்வரை இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கோட்டக்கல்வி அதிகாரி இ. சிவஞான சுந்தரம் அறிவித்துள்ளார். (உ-57)

## விபத்தில் கால்முறிவு

(யாழ்ப்பாணம்)

இராச வீதி நீர்வேலியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கால் முறிவடைந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புகையிரதவீதிகோண்டாவிலைச் சேர்ந்த ராசையா-ராசமனோகரன் (வயது-58) என்பவரே விபத்தில் கால் முறிந்தவராவார். (உ-104)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவினால் நடத்தப்படும் தையல்கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் காலை 9.30மணி தொடக்கம் பி.ப4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

வ.செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு வலி.கிழக்கு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்;

(செ)

# குறுகியகால போரோய்வில் நிலவிய அமைதியானது

# சமாதான வாழ்வின் உன்னதத்தை உணர்த்திச் சென்றுள்ளது

## கலாநிதி ஜெகான்பெரேரா வலம்புரிக்கு விசேட பேட்டி

தேசிய சமாதானப்பேரவைத் தலைவர் கலாநிதி ஜெகான் பெரேரா 20. 04. 2001 அன்று 'வலம்புரிக்கு' வழங்கிய பிரத்தியேக பேட்டியின்நேற்றைய தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது. (ஆ. ர்)

**★ வலம்புரி:**

தங்களது சமாதானப்பேரவையின் செயற்பாடுகளால் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பதில் உறுதியாக இருக்கின்றீர்களா?

(கையை விரித்துக் காட்டிய வண்ணம் மென்சிரிப்புடன் பதிலைத் தொடர்ந்தார்.)

**● ஜெகான் பெரேரா:**

எமது தேசிய சமாதானப் பேரவை போன்றவை குடிசார் குழுக்களேஎங்கள் மீது அதித நம்பிக்கை வைத்தல் விவேகமாகாது. நாங்கள் மக்களிடையே சமாதானம் பற்றிய எண்ணக் கருக்களை உருவாக்குவதற்கேமுயல்கிறோம் அதாவது சமாதானத்துக்கு உறுதுணையான சூழலை உருவாக்கவேயாபடுகிடுன்றோம். எங்கள் கையில் நேரடியாக அதிகாரம் இல்லை. அரசியல் அதிகாரம் வேறு ஆட்களின் கையிலேயே இருக்கின்றது. எனவே நாம் நேரடி அதிகாரப் பிரயோகத்தால் அரசியல்த் தீர்வை வற்புறுத்த முடியாது. எமது கருத்துக்களை மக்களுக்குப் பரப்ப மக்கள் தான் அதிகாரத்திலுள்ளவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். மக்கள் சக்திமகத்தான சக்தி.வடபகுதி மக்கள் சமாதானம் தொடர்பாக தெளிவாக இருக்கிறார்கள். தென்பகுதி மக்களையும்இந்த நிலைக்கு இட்டுச் செல்வதே எம்பொறுப்பெனக் கருதுகிறோம்.

பொதுமக்களிடையே கருத்தரங்குகள், கூட்டங்களை வைத்து பொதுஜனஅபிப்பிராயத்தைச் சமாதான வழிக்குக் கொண்டு செல்லமுயல்கின்றோம் விடுதலைப்புலிகள் சமீபத்தில்அரசாங்கம்தம்மீதுள்ள தடையை நீக்க வேண்டும். மக்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கான தடைகளை நீக்கவேண்டும்.

எனக் கேட்டனர்; அவர்கள் கேட்டதில் நியாயமுண்டு, அவ்வசமாதானப் பேச்சுக்கு உகந்த சூழ் நிலையை உருவாக்குமென நான்கருதுகிறேன்.

நாம் தெற்கிற்குச் சென்று அவர்கள் கேட்டதன் நியாயத்தை விளக்கவுள்ளோம். ஆகக் குறைந்தது போர் நிறுத்த காலத்தில், சமாதானப் பேச்சுக் காலத்திலாவது தடையை நீக்கலாம், நாம் புதிய கருத்துக்களை அரசியல்வாதிகளிடம் முன்வைத்துஏற்பட்டுள்ள சமாதான முயற்சிகளை விஸ்தரிக்கவுள்ளோம்.

**★ வலம்புரி**

தாங்கள்இங்கிருந்துதெற்கிலுள்ள மக்களுக்கு கொண்டு செல்லும் சேதி என்ன?

**● ஜெ. பெ.**

பலவிடயங்கள் சொல்ல இருக்கின்றன; முதலில் இங்குள்ள மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள்; கொடிய போரால் ஏற்படும் அழிவுகளை அவர்கள்விரும்பவில்லை என்றுசொல்லவேண்டும்.

இரண்டாவது இங்குள்ள மக்கள் தென்பகுதி மக்களுடன் நல்ல பொருளாதார, சமூகத் தொடர்புகளை வைத்திருக்க விரும்புகிறார்கள். சமூகமான உறவேற்படுவதை விரும்புகிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

மூன்றாவது இங்குள்ள மக்கள், விடுதலைப் புலிகளின் சமாதான சமிக்ஞைகளுக்கு அரசாங்கம் செவி கொடுக்காமல் இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். தம்சாதாரண குறைகளைக்கூட அரசுகவனத்திற்கு எடுக்க வில்லையென்று குறைப்படுகிறார்கள். அரசாங்கம் எம் கஸ்ரங்களை உணர்வதேயில்லை. உதாரணமாக யாழ்ப்பாண வைத்திய சாலை நிலை குறித்து கடிதங்கள் பல எழுதியும்பதிலில்லை இது வடபகுதிமக்களுக்கு அரசின் மீது அதிருப்தி ஏற்படக் காரணமாக உள்ளதெனத் தென்பகுதியினருக்குச் சொல்லவுள்ளேன்.

> **இங்குள்ள மக்கள் விடுதலைப் புலிகளின் சமாதான சமிக்ஞைகளுக்கு அரசாங்கப்செவிகொடுக்காமல் இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளனர். தமது சாதாரண குறைகளைக்கூட அரசு கவனத்திற்கு எடுக்கவில்லையென்று குறைப்படுகிறார்கள். அரசாங்கம் எம் கஸ்டங்களை உணர்வதேயில்லை. உதாரணமாக யாழ்ப்பாண வைத்திய சாலை நிலை குறித்து கடிதங்கள் பல எழுதியும் பதிலில்லை என்று கூறியுள்ளனர். அவர்கள்கூறிஇருப்பதை நான் தென்பகுதி மக்களுக்குச் சொல்லவுள்ளேன்.**

**★ வலம்புரி:**

நீண்டகாலத்திலோ குறுகிய காலத்திலோ ஸ்ரீலங்காவில் சமாதானம்ஒன்றுமலரும் என்று நம்புகிறீர்களா? இங்குள்ள மக்கள் மனதில் இடைவிடாது எழும் கேள்வி இது!

**● ஜெ.பெ:**

சமாதானம் ஏற்பட தற்போது மிக நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் அது உடனே வந்துவிடாது. இரு தரப்பும் பரஸ்பரம் புரிந்து கொண்டால் ஒரு நீண்ட காலப் போர் நிறுத்தம் ஏற்படலாம். ஆனால் நிரந்தர சமாதானம் ஏற்பட நீண்ட காலம் எடுக்கும். முதலில் போர் நிறுத்தத்தால் அமைதி வர வேண்டும். அது நிகழ முடியும் என்று நம்புகிறேன். இந்த இரு தரப்புப் போர் நிறுத்தத்திற்கு முதலில் சகல மக்களும், உலக நாடுகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும. அதன் பயனாக உருவாகும் போர் நிறுத்தத்தால் ஓரளவு அமைதி பிறக்கும். அது நிரந்தர அமைதி போலத் திருப்தியாய் இருக்காது. இந்தத் தற்காலிக அமைதிக் காலத்தில் இருதரப்பும் பரஸ்பர புரிந்துணர்வு, நம்பிக்கை ஆகியவற்றை வளர்த்துக் கொண்டால் அது நிரந்தரத் தீர்விற்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.எனவே அரசியல்க் கட்சிகளும் விடுதலைப்புலிகளும் அரசியல் தீர்வில் நம்பிக்கைவைத்து விடாது முயற்சி செய்தால் நிரந்தர சமாதான ஏற்பாடு ஒன்றைச் செய்து கொள்ளலாம். இடைக்காலத்தில் மக்கள் தற்காலிக சமாதானத்துடன் திருப்திப்பட வேண்டியதுதான்.

**★ வலம்புரி:**

சமாதானத்திற்காக தங்களின் சமாதானசபை என்ன செய்ய உத்தேசித்துள்ளது?

**ஜெ. பெ:**

சமாதான சபையின் நோக்கங்கள் இரண்டு ஒன்று மக்களைச் சமாதானச் செயற்பாட்டில் பங்கு பெறச்செய்வது. கடந்த காலங்களில் இங்கு அரசியல் தலைவர்களுக்கிடையேஏற்பட்ட உடன்படிக்கைகள் உயர் மட்டத்

செவ்வி கண்டவர்;

**ரீ. ரீ. மயூ**

தில் செய்யப்பட்டன. இந்த ''உயர் மட்ட விவகாரம்'' பற்றி மக்கள் எதுவும் அறியாததால் சந்தேகமும் குழப்பமும் அடைந்தனர்.

பண்டாரநாயக்காவும் செல்வநாயகமும், ஜே. ஆர் ஜயவர்த்தனாவும், ராஜீவ் காந்தியும் ஒப்பந்தங்களைச் செய்துள்ளனர். ஆனால் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் எதுவும் புரியாமல் மூளை குழம்பினர். தமக்கு எது சாதகம் எது பாதகம் என்பதை அறிய முடியாது திண்டாடினர்.

நாங்கள் மக்களை அரசியல் ரீதியாகப் படிப்பித்து சமாதான ஒப்பந்தங்கள அவர்களது நலனுக்குச் செய்யப் படுகின்றன என்பதை உணரச் செய்கிறோம்.

எமது சமாதான சபையின் இரண்டாவது குறிக்கோள் இந்நாட்டு மக்கள் அவர்களது தலைவர்களுடன் பேசி உடன்பாட்டுக்கு வரும் திறனை அதிகரிக்கச் செய்வதாகும்.அதன் பொருட்டு பல கருத்தரங்குகளை நடாத்துகிறோம். செயலமர்வுகள், பட்டறைகளை நடாத்துகிறோம்.வேறு நாடுகளுக்கு உதாரணமாக பங்களாதேஷ் வடக்கு,அயர்லாந்து இப்படியான நாடுகளுக்கு கூட்டிச் சென்று அவர்கள எப்படி இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்த்துள்ளனர் என்பதைக் காட்டுகிறோம். இதனால் பேச்சுவார்த்தையால் சமாதானம் ஏற்பட முடியும் என்பதை உணர்த்த முயல்கிறோம்.

**★ வலம்புரி:**

விடுதலைப்புலிகளோ, அரசாங்கமோ, இங்கு சமாதானம் ஏற்படத்தடையல்ல அமெரிக்கா, இந்தியா போன்ற வல்லரசு நாடுகள் தான் இலங்கைத் தீவில் சமாதானம் ஏற்படுவதை தடுக்க முயல்கிறது என்றுஒரு பகுதிமக்கள் கருதுகிறார்கள. இதுபற்றி தாங்கள் என்ன எண்ணுகிறீர்கள்? விடையளிக்க விரும்பினால் மாத்திரம் இதுபற்றிக் கூறுங்கள்.

(ஜெகான்இந்தவினாவினால் சற்று மாற்றமடைந்தாலும் சுதாகரித்துக்கொண்டு புன்னகைத்த வாறு பேசத் தொடங்கினார்.)

**● ஜெ பெ:**

தென்னிலங்கை மக்களைப் போலவே இந்தியாவும்,அமெரிக்காவும் தமிழருடைய பிரச்சினையை நன்றாக உணர்கிறார்கள். அனுதாபத்தோடு நோக்குகிறார்கள். தமிழர்கள் தங்களது நீதியான உரிமையைப் பெற வேண்டுமென எண்ணுகிறார்கள். அவ் விரு வல்லரசுகளும் இலங்கை ஒரு சமஷ்டி அரசாக உருவாதலையே விரும்புகின்றன. இந்தியா, அமெரிக்கா, அல்லது சுவிற்சலாந்து போல ஒரு சமஷ்டி ஆட்சியின் கீழ் தமிழர்கள் பூரண உரிமைகளுடன் வாழ்வதையே அவை விரும்புகின்றன.

> **தெற்கு இப்போது மாறிவிட்டது. அதாவது 18, 20வருட யுத்தம் அவர்களுக்குப் பாடம் புகட்டியுள்ளது. 1956, 1965, 1987 ஆம் ஆண்டுகளில் உடன்படிக்கைகள் ஏற்படும் போது எதிர்த்தவர்கள் எல்லாம் தம்பிழையான செயலை இப்போது உணர்ந்துள்ளார்கள், இப்போது அவர்கள் மாற்ற முற்றிருக்கிறார்கள். எந்த நீதியான தீர்வையும் ஏற்றுக் கொள்வதற்குப் பக்குவப் பட்டிருக்கிறார்கள்.**

ஆனால் இந்தியா விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை கடுமையான பகை உணர்ச்சியுடனேயே இருக்கிறது. மாபெரும் சக்தி வாய்ந்த நாடெனக் கூறிக் கொளளும் இந்தியா 90 காலப்பகுதியில் விடுதலைப் புலிகளால் ஏற்பட்ட தலைகுனிவால் எனிவரும் காலத்தில் விடுதலைபுலிகளை நல்ல கண்கொண்டு பார்க்கமாட்டாது.

அடுத்து அமெரிக்கா உலகின் மிகவும் சக்திவாய்ந்த வல்லரசு; அது தனது ஆணையை உலகெங்கும் செலுத்த விரும்புகிறது. சர்வதேச சட்டம், உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம், அனைத்து உலக நீதிமன்றம் போன்ற சர்வதேச நிறுவனங்கள் மூலமாக உலக அரசுகளைத் தனது சொற்படி நடாத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. அரசாங்கங்களை அமெரிக்காவால் கட்டுப் படுத்தமுடியும்; ஆனால் ஆயுத மேந்திய அமைப்புக்களையோ குழுக்களையோ அமெரிக்கா கட்டுப்படுத்த முடியாது. இதனால் தோன்றிய எதிர்ப்புணர்வாலேயே அமெரிக்கா விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புக்களைத் தடுத்துள்ளது. ஆனால் தமிழரது உரிமைகள் விடயத்தில் அது அனுதாப முடையதெனவே நான் கருதுகிறேன். எனவே இப்படியான இரு பெரும் வல்லரசுகள் தம்விடயத்தில் ஒருபிரச்சினையை மனதில் வைத்திருப்பதைகருத்திற்கொண்டுவிடுதலைப்புலிகள் உரிய விதத்தில் தமிழர் பிரச்சினைகளைக் கையாளவேண்டிய நிலையில் உள்ளனரென்றே கருதவேண்டும்.

**★ வலம்புரி**

இறுதியாகத் தங்களிடம் ஒரு கேள்வி யாழ்ப்பாண மக்களுக்கு தாங்கள் என்னகூற விரும்புகிறீர்கள்? . கொடிய யுத்தத்தால் குலைந்து போயுள்ள வடபகுதியினருக்கு தேசிய சமாதானப் பேரவை இறுதியாக என்ன சேதியை விட்டுச்செல்ல விரும்புகிறது?

**● ஜெ. பெ.**

சபையின் சார்பில் இதனைக் கூறுகிறேன். நாங்கள் இங்கு நடந்த அழிவைக் கண்ணுற்றோம் அதனால் கவலையடைகிறோம். இது யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்பட்டதையிட்டு மனவருத்தம் அடைகிறோம் எம்மைவிட தென்னிலங்கையிலுள்ள புரிந்துணர்வுடைய மக்கள் அனைவரும் இந்தப்போர் முடிவுக்கு வரவேண்டும் என்று பூரணமாக விரும்புகின்றனர். இங்கு அனைத்தையும் இழந்து துன்பமுறும் மக்களது வாழ்வு மீண்டும் மறுமலர்ச்சி பெறவேண்டும் இதற்காக நாம் பாடுபடுவோம். அரசைத் தூண்டுவோம். யாழ்ப்பாண மக்களுக்கு மற்றெவையும் கூற வருகிறோம். அதாவது தெற்கு மாறிவிட்டது. அதாவது 18, 20 வருட யுத்தம் அவர்களுக்குப் பாடம் புகட்டியுள்ளது 1956, 1965, 1987 இல் உடன்படிக்கைகள் ஏற்படும்போது எதிர்த்தவர்கள் எல்லாம் தம் பிழையான செயலை இப்போது உணர்ந்துள்ளனர். இப்போது அவர்கள் மாற்ற முற்றிருக்கிறார்கள், எந்த நீதியான தீர்வையும் ஏற்றுக்கொள்வதற்குப் பக்குவப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இவற்றை உணர்த்தி இங்குள்ளவர்களுக்கு நியாயமான தீர்வொன்று கிடைத்து நாட்டில் சமாதானம் மலர நாம் நிச்சயம் பாடுபடுவோம். இதுவே நாம் இறுதியாக கூறவிரும்பும் உறுதி உரையும் இறுதி உரையும் ஆகும்.

## ச. செ. சங்கத்துடன் தொடர்பு கொள்க

[யாழ்ப்பாணம்]

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுளளது.

இராசமணி (பெண்) கைதடி நாவற்குழி கோயிலாக்கண்டி.

அழகரத்தினம் சந்திரகுமார், பெருமாள் சந்திரகுமார் கச்சாய் வீதி, கொடிகாமம்.

சோதிசிவம் கோகிலறஞ்சிதம் நாகர்கோயில் தெற்கு.

விஜயசேகர் பூபாலசிங்கம், பூபாலசிங்கம் கமலாதேவி, பூபாலசிங்கம் அனுசியா உசன் தெற்கு, மிருசுவில்;

மாணிக்கம் பஞ்சவர்ணம், மாணிக்கம்செல்லபாக்கியம், மாணிக்கம் கந்தன், மாணிக்கம் ராஜன், மாணிக்கம் மோகன, மாணிக்கம் வதனி உடுப்பிட்டி வீதி தொண்டைமானாறு.

பிரான்சிஸ் அகஸ்ரின் இறக்கம், செம்பியன்பற்று.

கனகலிங்கம் யசோதரன. கனகலிங்கம் மதன், கனகலிங்கம் யசோநாத், கனகலிங்கம் மலர், இந்திரபுரம முகமாலை, பளை

முத்தையா மாணிக்கம் புத்தூர் மேற்கு

செல்வராசா ராணி சபாரட்ணம் ராசம்மா, நந்தகுமாரி செல்வராசா சுழிபுரம் வடகிழக்கு, சுழிபுரம் அல்லது சங்கானை

(உ)

## உயர்தரமாணவர்களுக்கான

# அறிவியல் வினாக்கள்

## இல-54 தொகுப்பு ரீ. மயூரன்

### பொது உளச்சார்பு

★ அடைப்பிற்கு வெளியே உள்ள சொல்லிற்கு ஏதோ ஒரு விதத்தில் பொருத்தமான ஒரு சொல்லை அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்க?

1) புகழ் (மகிழ்ச்சி, சித்தி, பாராட்டு, வெற்றி)
2) Tom (Tan, Pum, Rame, Rom)
3) வானம் (முகில், மண், நிலம், நீர்)
4) 78420 (753, 6783, 12, 9)
5) ml (kg, g, l, km)

★ ஒவ்வொரு நிரையிலும் தடித்த எழுத்தில் முதல் மூன்று சொற்களும் ஏதோ ஒரு வகையில் ஒத்தவை. அடைப்புக்குள் உள்ள சொற்களுள் ஒன்று தடித்த சொற்களுடன் ஒத்துள்ளது. அதன் கீழ் கீறிடுக.

6) **காகம், கரி, தார்** (கொக்கு, பறவை, கரும்பலகை)
7) **இரும்பு, செம்பு, தங்கம்** (உலோகம், வெள்ளி பாத்திரம்)
8) **கிளின்ரன், லெனின், வாஜ்பாய்** (கிலாரி, டாலி, லிங்கன்)
9) **கரம், சுரம், மரம்** (காரணம், சரம், வாரம்)
10) Cloud, Aloud, Meoud (Cloumn, Around, Peoud)

★ கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க.

11) காலைக்கு மாலை போல சிறுவனுக்கு ——————
(வயோதிபன், பையன், வாலிபன், மழலை)
12) கண்ணுக்குப் பார்வை போல செவிக்கு ——————
(பேச்சு, சத்தம், ஒளி, கேள்வி)
13) நேற்று என்பதற்கு நாளை போல வைகாசிக்கு ——————
(ஆவணி, பங்குனி, ஆனி, ஆடி)
14) சுணவனுக்கு மனைவி போலஷாஜ கானுக்கு ——————
(அலன், முகம்மது, மும்தாஜ், 2ஆம்லூயி)
15) 201 க்கு 250 போல 50 க்கு ——————
(92, 99, 101, 102)

★ பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

U, H, C, N, A, M என்பது முறையே 0, 1, 2, 3, 4, 5 ஆகிய எண்களைக் குறிக்கிறது.

16) $HCU + CU = ?$ ——————
17) $HU \times NU + CU(MU - HU) = ?$ ——————
18) $NUH + CHN \div HU = ?$ ——————
19) $\frac{C}{H} + \frac{M}{A} = ?$ ——————
20) $\frac{H}{C} + \frac{C}{C} + \frac{N}{M} - \frac{M}{A} = ?$ ——————

### பொது அறிவு

★ பின்வரும் நாடுகளின் தலைநகரைத் தருக.

21) இந்தோனிஷியா ——————
22) கியூபா ——————
23) மாலை தீவு ——————
24) தாய்லாந்து ——————
25) நியூசிலாந்து ——————

★ 26 30 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட 4 விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்க.

26) உலக புத்தக தினம் எது?
1) ஏபரல் 23 2) மார்ச் 11
3) நவம்பர் 29 4) யூன் 4
27) உலகிலேயே மழைகூடிய பிரதேசம் எது?
1) அம்பாவ 2) பியாஸ்ரெஸ்
3) சிறாப் பூஞ்சி 4) கானா
28) ஒலிம்பிக்கின் தாபகர் யார்?
1) டெனிஸஷ் 2) பியர்ஷ பெடி
3) சுஞ்மஷ் 4) லோறஸ்
29) இந்தியா முதன் முதலில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை எப்போது விளையாடியது?
1) 1932 2) 1972 3) 1947 4) 1979
30) விபுலானந்த அடிகள் பிறந்தது எந்த ஆண்டு?
1) 1893 2) 1892 3) 1891 4) 1894

★ பின்வரும் நாடுகளில் பாவிக்கப்படும் நாணயங்களின் பெயர்களைத் தருக.

31) சீனா ——————
32) பிரான்ஸ் ——————
33) வத்திக்கான் ——————
34) ஈரான் ——————
35) நோர்வே ——————

★ பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

36) ஒபெக் (O.P.E.C) அமைப்பு எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
37) இலங்கையை பிரித்தானியா எந்த ஆண்டு தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது?
38) காசியப்பனின் தந்தை யார்?
39) DNA (பிறப்புரிமை அலகு) இன் விரிவாக்கம் என்ன?
40) சின்னமுத்து, அம்மை, பிடிசுரம் போன்ற நோய்கள் எந்த வகை நுண்ணங்கியால் ஏற்படுகிறது?

## அறிவியல் பகுதி-53 விடைகள்

1) 3
2) 3
3) 1
4) 3
5) 2
6) கவலை
7) RUN
8) 33
9) தம்பி
10) முகில்
11) -18
12) -10
13) 108
14) 14
15) 1000
16) 11
17) 9
18) 7
19) 7
20) 8
21) 1945
22) 1988
23) 1987
24) 1996
25) 1974
26) PATA
27) இலிவை செல்
28) டிசெம்பர் 10
29) மொனாக்கோ
30) 1978
31) எலியாஸ்சோவ்
32) மேரிகியூரி அம்மையார்
33) கிறிஸ்ரி பெனாட்
34) சேர்க் பற்றச் மக்மிலன்
35) கிரகம் வெல்
36) வோல்கொயிங்கா
37) மேற்கிந்திய தீவு
38) ViLus
39) குக்கல், தொண்டைக் கரப்பன், ஈர்ப்புவலி
40) களுத்துறை

## அறிவியல் வினா இல-53

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர் விபரம்

★ அருணாசலம் அகிலன் இராஜவீதி கோப்பாய் தெற்கு.
★ தாட்சாயினி தர்மகுலசிங்கம் நவாலிவீதி ஆனைக்கோட்டை.
★ சி.சயந்தன் யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை.
★ எ.ரி.ஆனோல்ட் புனித பத்திரிசியார் கல்லூரி.
★ த.கிருஷாந்தி 41/1அரச வீதி நல்லூர்.
★ சத்தியா பாலகிருஷ்ணன் மெதடிஸ்த்த பெண்களஉயர்தரப் பாடசாலை.
★ விசுவகேது தமிழ்ச்செல்வி யூனியன் கல்லூரி.
★ எஸ்.டிலக்ஷி சுண்டுக்குளி மகளிர்கல்லூரி.
★ சபத்மஜா வேம்படி மகளிர் கல்லூரி
★ ஆர் சுமிரந்திரன் யாழ். இந்துக்கல்லூரி,
★ ச.கனகசுதன் யாழ். இந்துக் கல்லூரி.
★ ரீ.கௌசி சுண்டுக்குளி மகளிர்கல்லூரி.
★ தங்கராசா தரணிதரன் யாழ்ப்பாணக்கல்லூரி.

## அறிவியல் பகுதி வினா இல-54

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ....................................
சொந்த முகவரி: ....................................
கற்கும் பாடசாலை: ....................................
மாணவர் கையொப்பம்: ....................................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:-** விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகளை 3. 05. 2001 இற்குமுன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## பொது அமைப்புகள் ஈ.பி.டி.பி. இணைந்து மேதின ஏற்பாடுகள்

### வடமராட்சியில் இடம்பெறுகிறது

(மந்திகை)

வடமராட்சிப்பகுதி பொது அமைப்புக்கள்மேதின எழுச்சி நிகழ்வினை ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியுடன்இணைந்து நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் உடுப்பிட்டி அமைப்பாளர் பரஞ்சோதி ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு அலங்கார ஊர்திகள்சகிதம் ஆரம்பிக்கப் பட்டு எழுச்சிப்பேரணி யாழ்ப்பாணத்தைச் சென்றடையும்.

இந்நிகழ்வுகளில், வடமராட்சிச் கூட்டுறவு அமைப்புக்கள், முன்பள்ளி பாலர் பாடசாலைகள் சங்கம், கமக்காரர் அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள், கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் இணைந்து பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(உ-23)

## கைதடிப் பகுதிக்கு மாணவர் நலன் கருதி பேருந்து சேவை இரு தடவை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள கைதடிப்பகுதியில் மீளக்குடியமர்ந்த இடங்களில் தற்போது ஆறு பாடசாலைகள் இயங்க ஆரம்பித்துள்ளன.

கைதடி குருசாமி வித்தியாலயம், முத்துக்குமார சாமி மகாவித்தியாலயம், விக்கினேஸ்வராவித்தியாலயம், கலைவாணிவித்தியாலயம், சேதுகாவலர்வித்தியாலயம் மற்றும் நவபுரம் அ.த.க. பாடசாலை ஆகியவை இம்மாதம் 23 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவு கணிசமான அளவு இருப்பதாக அதிபர்கள் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இப்பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் நலன்கருதி வடபிராந்திய போக்குவரத்துச்சபை காலையும் மாலையும் பாடசாலை சேவைகளை ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-77)

## கணித விஞ்ஞான புதிர் போட்டிகள்

(மந்திகை)

தென்மராட்சிவலய பாடசாலை மாணவர்களிடையே கணித விஞ்ஞான புதிர் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

பாடசாலைவலய மட்டங்களில் நடாத்தப்படும் இப்போட்டிகள் கீழ், இடைநிலை உயர்நிலை என மூன்று பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளன.

பாடசாலை மட்டத்தில் போட்டிகளை நடத்தி ஒவ்வொரு பிரிவுக்கும் தலா ஐவர் தெரிவு செய்யப்பட்டு மாணவர்களின் விபரங்களை எதிர்வரும் மேமாதம் 10ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(உ-23)

## கும்பாபிஷேகம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் காசிவிஷாலாட்சி அம்பாள் சமேத காசி விஸ்வநாதர் தேவஸ்தானத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் 29 ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.10 -11.45 மணிவரைஇடம்பெறவுள்ளது. (உ-75)

## சிறுவனை அழைத்துச் செல்க!

(மந்திகை)

பருத்தித்துறை மாலுசந்திப் பகுதியில் தவறவிடப்பட்ட சிறுவன் தம்வசம் இருப்பதாக ஈ.பி.டி.பி அமைப்பின் மந்திகை அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை சிறுப்பிட்டியில் இருந்து பேருந்தில் சென்றவேளை, மாலுசந்திப் பகுதியில் தவறவிடப்பட்ட இராசையா பிரசாந் (வயது 7) என்பவரே மேற்படி அலுவலகத்தில் இருப்பதாகவும்,

உறவினர்களை உடன் பொறுப்பேற்குமாறு ஈ.பி.டி.பி யினர் அறிவித்துள்ளனர்.

(உ-23)

## மீள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யா/ போதனா வைத்தியசாலைஇயன்மருத்துவப் பிரிவு பொறுப்பதிகாரி நா.செல்லையா சுகாதார அமைச்சினால் மீள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(உ-104)

### இன்று ஒரு தகவல்

## தற்பெருமை தலை கவிழ்வு

சீடன் ஒருவன் தன் குருவைக் கண்டு வணங்குவதற்காகக் காணிக்கைப்பொருட்களுடன் சென்று கொண்டிருந்தான். அந்தக் குருவின் மீது ஏற்கனவே பொறாமை கொண்டிருந்தயோகி ஒருவர் அந்தச் சீடனை வழி மறித்தார்.

அவனைப்பார்த்து 'உன் குருவிற்கு எதுவுமே தெரியாது. அவர் ஒரு முட்டாள். நீ அவரை விடப் பெரிய முட்டாள். அதனால் தான் நீ அவரைக் குருவாகஏற்றுக்கொண்டுள்ளாய். உன் குருவால் ஏதேனும் அற்புதம் செய்து காட்ட முடியுமா? என்னைப் போல் அவரால் நீரில் நடக்க முடியுமா? வானத்தில் பறக்க முடியுமா? அல்லது பூமியில் தான் புதைந்து கிடக்க முடியுமா? அவரால் எதுவுமே செய்ய முடியாது. அப்படிப்பட்ட குருவிடம் சென்று ஏன் உன் நேரத்தை வீணாக்குகின்றாய்?' என்று தற்பெருமையுடன் கேட்டார்.

அதற்கு அந்தச்சீடன் 'நான் ஏன் அவரைக் குருவாகக் கொண்டிருக்கிறேன். மதிக்கிறேன், வணங்குகிறேன் தெரியுமா? அவர் எப்பொழுதும் பிறரைக் குறை சொல்லமாட்டார், கோபப்படமாட்டார். இவற்றைத்தான் நான் அற்புதங்களில் எல்லாம் மிகச் சிறந்த அற்புதம் என்று நினைக்கிறேன்' என்று பதில் தந்தான். இதைக் கேட்ட யோகி தலை கவிழ்ந்தபடி அந்த இடத்தை விட்டுச் சென்றார்.

பேராசிரியர் எ. சோதி

### செய்தித் துளிகள்

## அன்பளிப்பு

(மந்திகை)

கரவெட்டி பிரதேச முன்பள்ளி பாலர் பாடசாலை சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட மழலைகள் கலை விழாவில் வைத்து ஈ.பி.டி.பி அமைப்பு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை அன்பளிப்பு செய்துள்ளது.

(உ-23)

## இரவல் பகுதி இயக்கமில்லை

[ஊர்காவற்றுறை]

புளியங்கூடல் மகாமாரி சனசமூகநிலைய நூலகத்தின் இரவல் பகுதி இயங்காத நிலையில் இருப்பதாக அப்பகுதி மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந் நூலகத்தில் இரவல் வழங்கும் பகுதி ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் மாணவர்கள் பெருநன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

[உ-75]

## 'கண்ணாடி வழங்கல்

(ஊர்காவற்றுறை)

மாதகல் பகுதியில் உள்ள கண்பார்வை அற்ற 32 பேருக்கு அண்மையில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

மாதகல் விவசாய சம்மேளனத்தின் தலைவர் சி. தவராசா தலைமையில் மயில்வாகனப்புலவர் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இம் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

(உ-75)

## இளைஞன் வீடு திரும்பவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த புதுவருடதினத்தன்று வீட்டிலிருந்துவெளியே சென்ற தேநீர்க்கடை ஊழியரான வரணியைச் சேர்ந்த வல்லிபுரம் கிருபாகரன் (வயது 20) இன்னமும் வீடு திரும்பவில்லையென உறவினர்களால் மனித உரிமை ஆணைக்குழுவில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-10)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன் தினம் கச்சேரியடிப் பகுதியில், இராணுவ மோட்டார் சைக்கிள் மோதியதால் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த குட்டித்தம்பி முருகையா (வயது 38) என்ற குடும்பஸ்தர் காயமடைந்த நிலையில் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-10)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொடருறு ஆசிரியர் கல்வி பற்றிய அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று 26ஆம், 27ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலய அதிபர்களுக்கான கலந்துரையாடல் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்துள்ளார்.

(உ-2-49)

## மிதிவெடியில் அகப்பட்டு கால் இழப்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்குப் பகுதியில் மிதிவெடியில் அகப்பட்ட ஒருவர் தனது கால் ஒன்றை இழந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த கே. குணசிங்கம் (வயது36) என்பவரே இவ்வாறு காலை இழந்தவராவார். (உ-104)

## திருடர் கைவரிசை

(சுழிபுரம்)

சங்கானை சிலம்புப் புளியடியில் திருடர் கைவரிசை அதிகரித்து வருவதாக 'அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதியில் வசிக்கும் அரச பணியாளர் ஒருவரது வீட்டினுள் கடந்த வெள்ளியன்று புகுந்த திருடர் அவரது கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

(உ-ப-10)

## ராக தேவதைகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 9.30 வரை ராக தேவதைகள், எனும் இசை நிகழ்ச்சி பொதிகை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

இந்த இசை நிகழ்ச்சியில் இசைப் பேராசிரியர்கள் இசை பயிலும் மாணவர்கள் நடாத்தும் ராகங்களைப் பற்றிய கலந்துரையாடல்கள் மற்றும் விளக்கங்களைக் கொண்ட அரிய நிகழ்ச்சியாகவும் பொது மக்கள் யாவரும் இசை குறித்து எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. (உ)

மாணவர்களை

# ஒழுக்கமானவர்களாக உருவாக்க தண்டனைகளை விதிக்காதீர்!

## கல்வியமைச்சு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் மாணவ, மாணவியருக்கு அதிபர்கள், ஆசிரியர்களால் ஏற்படுத்தப்படும் உடல்உள ரீதியான தாக்கங்களைத் தவிர்க்கும்படி கல்வி அமைச்சினால் சுற்று நிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது மாணவர்களை ஒழுக்க, மாணவர்களாக உருவாக்குவதற்காக அதிபர்கள், ஆசிரியர்களால் எடுக்கப்படும் நடவடிக்கைகளால் அவர்களுடைய ஒழுக்க நடவடிக்கைகள் சீர்செய்யப் படுவதற்கு பதிலாக விரக்தி போன்ற பாரதூர மான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

எனவே, அவர்களுக்கான தண்டனைகளை விடுத்து மாற்று நடவடிக்கைகளாக எச்சரிக்கை செய்தல், பெற்றோருக்கு அல்லது பாதுகாவலருக்கு அறிவித்தல், கடுமையான ஒழுக்க மீறல்கள் ஏற்படும் போது தகுந்த காரணங்களோடு மணவர்கள் அனுபவிக்கும் சிறப்புரிமைகளைத் தடைசெய்தல் வகுப்பால் குறிப்பிட்ட காலத்திற்கு இடைநிறுத்தல் போன்ற நடவடிக்கைகளை அமுல்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாறாக மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படுமிடத்து அதைக் குற்றமாகக் கருதும் சட்டங்கள் பற்றியும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ-2)

## போராட்டம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

திருகோணமலை பிறீமா மா ஆலையில் ஏற்பட்டுள்ள குழப்பம் முடிவுக்கு வந்ததையிட்டு போக்குவரத்து ஒப்பந்தக்காரர் தமது போராட்டத்தை நிறுத்தியுள்ளனர்.

உணவுகள் ஏற்றி இறக்கும் விவகாரத்தில் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்ட போக்குவரத்து ஒப்பந்தக்காரர்கள் உணவு ஆணையாளருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் இவர்களின் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

(உ-7)

## இராசி பலன்

27 - 4 - 2001

(சித்திரை 14, வெள்ளி)

சதுர்த்தி மாலை 5.54 வரை

மிருக சீரிடம் ந.இ 2.49வரை

ராகுகாலம் 10 29-11.59

நல்ல நேரம்-5.59-7.29

சதுர்த்தி விரதம்

**மேடம்**

நினைத்த காரியம் கைகூடும், இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை.

**இடபம்**

வீண் விவாதம், பொருள் விரயம், கௌரவக் குறைவு, முயற்சி தாமதம்.

**மிதுனம்**

ஜனவசியம், காரியம் கைகூடும், கற்பனை மிகுதி, நண்பர்கள் உதவி.

**கடகம்**

மனக்கிலேசம், சுப செலவு, பிரயாணம், முயற்சி தாமதம்.

**சிங்கம்**

மன மகிழ்ச்சி, தனலாபம், காரிய நன்மை, தெய்வ தரிசனம்.

**கன்னி**

சுப நிகழ்ச்சி, மேன்மை, தொழில் நன்மை, பிறர் உதவி.

**துலாம்**

புதிய திட்டம், பிரயாணம், உடல் சோர்வு, பயந்த சுபாவம்.

**விருச்சிகம்**

பிரயாண பயம், வீண் தொல்லை, முயற்சி தடங்கல், திடீர் நன்மை.

**தனுசு**

கௌரவம், களஸ்திர சுகம், நண்பர்கள் சந்திப்பு, காரியம் கைகூடும்.

**மகரம்**

சந்தோஷம், நோய் குணமடைதல், தொழில் விருத்தி, முயற்சி ஜெயம்.

**கும்பம்**

தொழில்நன்மை, புத்திரால் சோகம், வியாபாரச் சிறப்பு, முயற்சி தாமதம்.

**மீனம்**

தன்னம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், அற்பர் உறவு, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## தேவையான உணவுப் பொருட்கள் களஞ்சியங்களில் உண்டு

### செயலக அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்களிற்கு தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அரச களஞ்சியங்களில் தட்டுப்பாடு என்றபேச்சுக்கு இடமில்லை என்று யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

அரச களஞ்சியங்களில் அடுத்தமாதம் வரைக்கும் போதுமான அளவு அரிசி, மா, சீனி, பால்மா போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இருப்பில் இருப்பதாகவும், மேலும் தேவையான உணவுப் பொருட்களைகப் பலில் எடுத்து வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப் படுள்ளதாகவும். அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இடம்பெயர்ந்தோருக்கு ஏப்ரல்மாதம் நிவாரணம் வழங்குவதற்கு தேவையான உணவுப் பொருட்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வ]

## மட்டக்களப்பில் தீவிர தேடுதல்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு நகரும் அதனை அண்டியுள்ள பூம்புகார் வெட்டுக்காடு திருமலைவீதிப் பகுதி மற்றும் ஊறணி ஆகிய பகுதிகளும் நேற்று முன்தினம் அதிகாலை படையினரால்சுற்றிவளைத்து தேடுதல் நடத்தப்பட்டது.

படையினரால் அப்பகுதி மக்கள் அனைவரும் திருமலை வீதி பொது மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டு இளைஞர்கள், யுவதிகள் சிறுவர்கள் முதியோர்கள் என வகைப்படுத்திமுகமூடிகள்முன் நிறுத்தப்பட்டு விசாரணைகள இடம்பெற்றது.

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த நீடிப்பை வாபஸ் பெற்றதையடுத்து கிழக்கு மாகாணத்தில் தாக்குதலை ஆரம்பிக்கலாமென்ற அச்சமே இச்சோதனை நடவடிக்கைகள் எனதெரிய வருகிறது. [இ]

## பண்ணிசைப் பா ஓதும் பயிற்சி

(நல்லூர்)

கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் இ. சிவபாதசேகரத்தின் தலைமையில்; கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் தொடர்பிலான, சைவசமயப் பண்ணிசைப் பாக்கள் ஓதும் பயிற்சி அண்மையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

அருளிசையரசு தாவடியூர் கே.எஸ்.ஆர் திருஞானசம்பந்தன் இப் பண்ணிசைப்பயிற்சியினை அளித்தார். ஆசிரியர் விநாசித்தம்பியும் இந் நிகழ்வில் உரையாற்றினார்.

(உ-103)

## மட்டுப்படுத்தப்பட்ட விமானசேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையிலான விமான சேவையில் இருவழிப் பயணச்சீட்டு பெற்று பயணம் செய்வோரின் தொகை அதிகரித்து வருவதனால் இருவழி விமானச்சீட்டுக்கான பதிவுகளை மட்டுப்படுத்த வேண்டியுள்ளதாக ரான் அலுவலகம் அறிவித்துள்ளது.

இருவழி விமானப்பயணச் சீட்டுக்களை நோயாளர், அவசர வேலை நிமித்தம் பயணம் செய்வோர் மற்றும் மரண வீடுகளுக்குச் செல்வோர் ஆகியோருக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கவுள்ளதாக ரான் அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நாளொன்றுக்கு மூன்று சேவையாகவிருந்த விமான சேவை இரண்டு சேவையாகக் குறைக்கப்பட்டதே நெருக்கடிக்கு காரணமென்பதால் சேவை சீரானதும் வழமைபோல் இருவழிப்பயணச்சீட்டு வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-இ-10)

## அமெரிக்காவில் இருந்து புறப்பட்ட தானியங்கி விமானம் அவுஸ்திரேலியாவில் தரை இறக்கம்

(வாஷிங்டன்)
அமெரிக்காவின் கலிபோர்னியாவிலிருந்து புறப்பட்ட தானியங்கி விமானம் அவுஸ்திரேலிய விமான நிலையத்தைச் சென்றடைந்துள்ளது.

மேற்படி விமானம் 22 மணி நேரம் பிரயாணம் செய்து பசுபிக் சமுத்திரத்தைக் கடந்து அவுஸ்திரேலியாவில் தரையிறங்கி சாதனை படைத்துள்ளது.

மேற்படி விமானச் செயற்பாடு அமெரிக்க விமானத் துறையின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுவதாக கூறப்படுகிறது.

குளோபல்எனப் பெயரிடப்பட்ட தானியங்கி உளவு விமானம்,முக்கிய இராணுவ நிலைகளையும், நடமாட்டங்களையும் படம் பிடித்துச் சென்றுள்ளது.

(து-உ)

## பயங்கரவாதிகள் படையினர் மோதல்

[ஸ்ரீநகர்]
ஜம்மு காஷ்மீரில் நேற்று முன்தினம் இந்திய இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளதாகத் அறிவிக்கப்பட்டுள்ளது.

லக்சறி இதொய்பா என்ற முஸ்லிம் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களே மேற்படி தாக்குதலின் போது இறந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-9)

## குண்டு வெடிப்பு

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் நெரிசல் மிக்க சந்தைப் பகுதியில் குண்டொன்று வெடித்ததில் 25 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்

ஒரு கைவண்டியில் பொருத்தி வைக்கப்பட்ட குண்டே வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## ஐ. நா. வுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

[ஹிபியா]
ஐக்கியநாடுகளுக்குஎதிராக றுவாண்டா நாட்டின்முக்கிய அமைச்சர் ஒருவர் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

கொங்கோவில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது உகண்டாறுவாண்டா மற்றும் அவற்றின் ஆதரவுப் போராளிக் குழுக்கள் நடத்திய சூறையாடலில் தன்னுடைய மனைவியும் தொடர்பு பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் குற்றம் சாட்டியுள்ளதை அடுத்து தனக்கு மரியாதைக் குறைவு ஏற்பட்டுள்ளதாக றுவாண்டா அமைச்சர் தெரிவித்துள்ளார்.

[உ-7]

## 4 வயதுச் சிறுமியை பதம் பார்த்த 50 முதலைகள்

[போனோம்பென்]
4 வயதுச் சிறுமி முதலைகளுக்கு இரையான சம்பவம் கம்போடியாவில் இடம்பெற்றுள்ளது.

பாட்டனாரின் முதலைப் பண்ணைக்குச் சென்ற மேற்படி சிறுமி, குளத்தை எட்டிப் பார்த்த வேளை தவறுதலாக குளத்தில் விழவே அவளை அங்கிருந்த 50 முதலைகளும் உணவாக உட்கொண்டதாக கூறப்படுகிறது.

மேற்படி சிறுமியை காப்பாற்றும் நோக்கில் குளத்துள் இறங்கிய முதியவரையும் முதலைகள் தாக்கிய போதும் பணியாளர்களால் மீட்கப்பட்டார்.

இதேசமயம், கம்போடியாவில் முதலை வளர்ப்பு சிறுகைத்தொழிலாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

[உ-7]

## செய்திப்பரல்

★ பெங்களூர் கணனி உற்பத்தி நிலையம் புதியரக மிகச்சிறிய கணனியை உற்பத்தி செய்துள்ளது. இதன் விலை ஒன்பதினாயிரம்ரூபாமட்டுமே.

★ தாய்வானுக்கு எந்த நேரமும் உதவ இருப்பதாக ஜோர்ச் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

★ முதல்வர் பதவியை ஏற்க தடைகள் இருக்கிறதா என்பதை ஜெயலலிதா ஆராய்ந்து வருகிறார்;

★ இந்திய பங்களாதேஷ் எல்லைகளில் இருநாட்டினரும் படைகளைக் குவிக்கிறார்கள்.

★ இந்த ஆண்டின் சிறந்த விமான நிலையமாக கொங்கொங் விமான நிலையம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (து)

## குடும்பஸ்தர் தற்கொலை

பூச்சி கொல்லி மருந்தினை அருந்திய நிலையில் யாழ. போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கபபட்டிருந்த தாவடி வடக்கு கொககுவிலைச் சேர்ந்த தமபிராசா சந்திரகுமார் [வயது-28] என்ற இளம் குடுயஸ்தர் நேற்றைய தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் மரணம் அடைந்துளளார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. [உ-10]

## கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் அமைப்பு

[யாழ்ப்பாணம்]
கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியா சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் படடது.

தலைவராக ம. ரவீஸ்வரன், உப தலைவராக செல்வி எஸ் யோகரட்ணம், இணைச் செயலாளர்களாக நா. மகேந்திரராசா, க. சுமதி, பொருளாளராக கே. குணநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கல்வியியற் கல்லூரியில் டிப்ளோமா பட்டம பெற்றவர்களுக்கான உயர் கல்வி சம்பந்தமான முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட விருப்பதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் உடன் சங்கத்தில் பதிவு செய்து கொளளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-39)

## வரும் 9 ஆம் திகதிவரை விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
கடந்த வருடம் மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற 8 பேர் படுகொலையுடன் தொடர்பு பட்டதாகக் கருதப்படும் 13 படையினர், நேற்று முன் தினம் பலாலி இராணுவப் பொலிஸாரினால் சாவகச்சேரி நீதிவான் அன்னலிங்கம் பிறேமசங்கர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

எஸ். ரட்ணாயக்கா, எஸ். திஸநாயக்க, எஸ். முனசிங்க, எஸ். ரணசிங்க, எம்.ஜெயரட்ண,எஸ்.சஞ்சிவ குமார, டி. மகிந்தகுமார, எ.லக்ஸ்மன்குமார, எஸ் மியனகும்புர, டி. சிவங்க, பி. அபயவிக்கிரம, பி. சுமன் குமாரஎஸ்.காமினி முனசிங்க ஆகியோரே ஆஜர்ப்படுத்தப் பட்டனர்.

மேற்படி 13 பேர் தொடர்பான விசாரணைகள் அடுத்த மாதம் 9ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (உ-6)

## செயற்குழு கூட்டம்

[யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தொழிற் சங்க செயற்குழு தெரிவும் ஆண்டுப் பொதுக் கூட்டமும் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் தலைவர் இ. தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அனைத்து பொதுச் சுகாதார பரிசோதகர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி செயலாளர் கேட்டுள்ளார். (உ-104)

## வீடு புகுந்தோர் இளைஞர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
வீடு புகுந்து இருவர் ஒரு சேரத் தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் யாழ்: போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளார்;

மயிலங்காடு ஏழாலையைச் சேர்ந்த க.விக்கினேஸ்வரன் (வயது 24) என்பவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இரவு 9 00 மணியளவில் இடம்பெற்றுள்ளது;

[உ-10]

## 7 வருடங்களில் 2469 சடலங்கள் ஒப்படைப்பு

(கொழும்பு)
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 1995 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில்,சேவை அடிப்படையில், படையினர் மற்றும் விடுதலைப் புலிகளின் சடலங்கள் 2 ஆயிரத்து 469ஐ உரியவர்களிடம் கையளித்துள்ளது;

ஆயிரத்து 419 சடலங்கள் படையினரிடமும் ஆயிரத்து 50 சடலங்கள்விடுதலைப் புலிகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாய் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க செய்திமடல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நாட்டார் கூத்தன் காலமானார்

(மந்திகை)
புலோலி கிழக்கு வளர்பிறை மன்றத்தின் மூத்த நடிகரும் அண்ணாவியுமான நாட்டார் கூத்தன் பெரியான் பைரவி தனது நூறாவது வயதில் செவ்வாயன்று காலமானார்.

நாட்டார் கூத்து பரம்பரையைச் சேர்ந்த இவர் செட்டி வர்த்தகன் கர்ணன், அல்லி, சந்திரபூரணி, பப்பரவாகன் போன்ற பல நாட்டுக் கூத்துகளைநடித்தும் மேடையேற்றியுள்ளார்.

ஆண், பெண், பாத்திரங்களை ஏற்றுத்திறம்பட நடித்திட இவர், 500 க்கு மேற்பட்ட கூத்துக்களை நடித்தும் 300 க்கு மேற்பட்ட தடவை கூத்துக்களை மேடையேற்றியுள்ளார்.

இளம் கலைஞர்களை உருவாக்குவதிலும் முன்னின்று உழைத்த இவருக்கு, வளர்பிறை மன்றத்தினால் கடந்த 95 ஆம் ஆண்டு ''நாட்டார் கூத்தன்'' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது;

(உ-23)

## தண்ணீர் எடுத்த இளைஞர் தவறி வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)
தண்ணி அள்ளிய சமயம் கிணற்றில் தவறி வீழ்ந்த இளைஞர் மரணத்தைத் தழுவிக் கொண்ட பரிதாபச் சம்பவம் நேற்றைய தினம் உடுவில் டச்சு றோட் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவஞானம் குணநாதன் (வயது 22) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்;

(உ-10-104)

## காணாமற் போனோர் பற்றிய விசாரணை சமுகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
96, 97 ஆம் ஆண்டுப் பகுதியில் யாழ். குடாநாட்டில் இருந்து காணாமற் போனோர் சம்பந்தமான விசாரணைகளை நடத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் பின்வருவோரின் உறவினர்கள், சாட்சிகள் ஆகியோரை பொலிஸ் நிலையங்களுக்கு தொடர்பு கொண்டு சாட்சியங்களை அளிக்குமாறு கேட்டுள்ளனர்.

### யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம்

சண்முகநாதன் உதயகுமார் 9/ 8 மலர்மகள் வீதி அரியாலை.

சேனாதி தர்மபாலன் 245 எ. பி. றோட் அரியாலை.

சிவாஜினி ஆறுமுகம் 2ஆம் குறுக்குத்தெரு கொழும்புத் துறை யாழ்ப்பாணம்.

மாரிமுத்து கோபிராஜ் மட்டுவில் தெற்கு மட்டுவில்.

எஸ். இலங்கைநாயகன் மறவன்புலவு வடக்கு சாவகச்சேரி.

சின்னையா இராசாயி மட்டுவில் தெற்கு சாவகச் சேரி.

எ. கே. ரகுமான் 79, பீச் றோட் யாழ்ப்பாணம்:

குணரட்ணம் அருமைராசா 83/எ.ஸ்ரான்லிறோட்யாழ்ப் பாணம்.

இனாசிமுத்து கஜேந்திரன் 75, பிரதான வீதி யாழ்ப் பாணம்;

கந்தசாமி சுகுணராசா 18/ 17, நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம.

சண்முகம் சற்குணராசா கைதடி மேற்கு கைதடி.

சுப்பையா மகாதேவா 11/ 4 பண்டாரக்குளம் நல்லூர் யாழ்ப்பாணம்;

### பருத்தித்துறை பொலிஸ் நிலையம்

எஸ். ரமேஸ்வரன்கோயில் வீதி வல்வெட்டித்துறை

குமாரரத்தினம் இந்திரகுமார் ஆதிகோயிலடி வல்வெட்டித்துறை.

முருகன் சுந்தரலிங்கம் வண்ணாங்கேணி பளை.

தில்லையம்பலம் ரங்கநாதன் வாடிலேன் வல்வெட்டித்துறை.

வீரநேசி கதிரவேலு கரவெட்டி மத்தி கரவெட்டி;

### சுன்னாகம் பொலிஸ் நிலையம்

தம்பிராசா சந்திரமோகன் பிளக்லேன் சுன்னாகம்.

சின்னத்தம்பிசெல்வராஜன் அராலி மேற்கு அராலி.

செல்வன் தவநேஸ்வரன் தொல்புரம் மேற்கு சுழிபுரம்.

கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் மே/பா நடேசபிள்ளை குமாரலிங்கம் இணுவில் கிழக்கு இணுவில்.

சிவனேஸ்வரி விஸ்வலிங்கம் சுழிபுரம் மத்தி சுழிபுரம்.

(உ-10)

வசையென்ப வையத்தார்க்
கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்

குறள்

# வலம்புரி

## பதுக்கல் ஓங்கும்!

விடுதலைப்புலிகள்யுத்த நிறுத்தத்தை நீடிக்காததை அடுத்து அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கும் நடவடிக்கையில் சில தீய சக்திகள் ஈடுபடத் தொடங்கி விட்டன. வழமையாக ஓர் யுத்த சூழ் நிலையில்ஏழைகளின் உழைப்பைச் சுரண்டி சம்பாதித்த குறிப்பிட்ட சில வர்த்தகர்களுக்கு கடந்த நான்கு மாத கால யுத்த நிறுத்தமும் பெரும் வேதனையை அளித்திருக்குமென்பது திண்ணம்.

வேண்டுமென்றே பொருட்களுக்குத் தட்டுப்பாடுகளை ஏற்படுத்தி கொள்ளை லாபம் அடிக்கும் கூட்டமொன்று நம் மத்தியில் இருக்கவே செய்கிறது. இக் கூட்டத்தின் இலக்கு வெற்றியடைய வேண்டுமாயின் யாழ். மண்ணில் யுத்தம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதே அவர்களின் பிரார்த்தனையாகும்.

யுத்தச் சூழ் நிலையை- இடம் பெயர்வை- கப்பல் போக்கு வரத்து தடைப்படுதலை சாதகமாகக் கொண்டு சில வர்த்தகர்கள் மேற்கொள்ளும் பதுக்கல் நடவடிக்கைகளும் அதனூடே கறுப்புச் சந்தையை தோற்றுவிக்கும் தந்திரமும் இனிமேல் தாராளமாக நடைபெறவுள்ளது.

இம் மோசடியினைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ்.செயலகம், வணிகர் கழகம், நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம், கூட்டுறவுச் சங்கங்கள் வர்த்தகத் திணைக்களங்கள் முன்வர வேண்டும்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், வர்த்தகத் திணைக்களங்களும் தாராளமாகப் பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நீக்க முடியும். அதே வேளை இவ் அமைப்புக்கள் தாமும் கொள்ளை லாபம் ஈட்டும் முயற்சிகளில் ஈடுபட்டால் மக்கள் பாடு அந்தோ கதி தான். கூட்டுறவுச் சங்கங்கள் தம்மிடமிருக்கும் உணவுப் பொருட்களை ஒட்டு மொத்தமாக பதுக்கல் வியாபாரிகளிடம் வழங்குவதைத்தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

அதே வேளை யாழ். செயலகமும், வணிகர் கழகமும் பதுக்கல் நடப்பதைத் தடுப்பதில் முனைப்புடன் செயலாற்றுவது காலத்தின் கட்டாய தேவையாகும்.


---

வெள்ளி நற்சிந்தனை

# பழம் பெருமை வாய்ந்த வல்லிபுரம் ஆலயம்

# வரலாற்றுச் சிறப்புடைய வழிபாட்டுத் தலம்

புலோலி வே. ஆறுமுகம்



வல்லிபுர ஆழ்வார் கோயில் வரலாற்று ரீதியாக மிகப் பழமை வாய்ந்த தொன்றாகும். இத் திருத்தலம் பற்றி தட்சணகயிலாய புராணம், தட்சணகயிலாய மாண்மியம், கோகில சண்டேச போன்ற பண்டைய இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டுள்ளமை இதன் தொன்மையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

### வல்லிபுரம்

இத்தலத்தின் ஆரம்ப காலம் மிகப் பழமை வாய்ந்த தான படியால் துல்லியமாக வரையறுத்துக் கூறப்படவில்லை. வரலாற்று ரீதியாகக் கிடைக்கப்பெற்ற தரவுகளின் படி, உக்கிரம சிம்மன் என்னும் நாக மன்னர் பரம்பரையில் உதித்த பேரரசன் யாழ்ப்பாணத்தை தனது ஆட்சியின் கீழ் கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இணைத்ததுடன் கந்தரோடையில் இருந்த இராஜதானியை சிங்கை நகருக்கு இடமாற்றம் செய்தான்: வல்லிபுரம் சிங்கை நகரின் தலைநகரம் என்பது வரலாற்று ஆய்வாளரின் துணிவு: வல்லிபுரம் தலைநகராக கி. பி. 1450 வரை சிறப்புறத் துலங்கியது.

### தொல்லியல் ஆய்வு

தொல்லியல் திணைக்களத்தால் காலத்துக்குக் காலம் இக்கோயிற்சுற்றாடல்அகழ்புகளில் கண்டெடுக்கப்பெற்ற தொல்பொருட்களின் ஆய்வறிக்கையின் பிரகாரம் வசப அரசனால் கி. பி. 2 ஆம் நூற்றாண்டளவில் முன்னர் பௌத்த விகாரை ஒன்று இருந்த தலத்தில் இக் கோயில்கட்டப்பட்டதென்று பேராசிரியர் கணபதிப் பிள்ளை அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். இக்கூற்றுக்கு சான்று பகரும் முகமாக கி. பி. 127 - 171 காலத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற வல்லிபுர சாசனம் வசப அரசனின் ஆணையின் பிரகாரம் பியதிஸ்ஸ குகபதக்கன் என்னுமிடத்தில் ஒரு விகாரை நிறுவினான் என்று கூறுகிறது. இவ்விடம் வல்லிபுரமாக அமையுமென்பது வரலாற்று வல்லுநரின் கருத்து:

இந்த அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பெற்ற மட்பாண்டங்கள் நுண்மையாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட போது அவை வெளித் தோற்றத்தில் வரலாற்றுக் காலத்தைப் போன்று காட்சி அளித்தாலும் பண்டைக் காலத்தைச் சேர்ந்தவை என்றும் வல்லிபுரம் மிகப் பழமை வாய்ந்த தொழுகைத் தலமென்றும் ஏனைய பொருட்களின் ஆய்வின்படி அவை தொழுகைக்கு வந்த பொருட்களென்றும் அவ்வாறு கிறிஸ்துசகாப்தத்துக்கு முன்னரிருந்தே பூசிக்கப்பட்டு வந்தன என்றும கலாநிதி சிற்றம்பலம் சற்று வேறுபட்ட கருத்துத் தெரிவித்துள்ளார்:

### விஷ்ணு வழிபாடு

இக்கூற்றை ஆதரிக்கும் வகையில், இது தொடர்பான ஆதாரங்களை ஆராயும் போது விஷ்ணு தொழுகை இற்றைக்கு குறைந்த பட்சம்2000 ஆண்டு பழமை வாய்ந்ததென கலாநிதி இந்திரபாலா 1980 களில் தனது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இத்துணை புராதன புகழ் பூத்த புண்ணிய பூமி வல்லிபுரம். இத்திவ்ய வல்லிபுரத்தில் ஆயிரம் ஆயிரம் ஆண்டு காலமாக ஆழ்வார் என்ற பெயரில் குடிகொண்டிருந்து அடியார்க்கு அருளாலிக்கிறான் உலகுண்ட பெருமான் நாராயணன்.

---

# யுத்த நிறுத்தம் முடிவுற்றாலும்

# குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறா

## ஆரியரூபசிங்க நம்பிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒருதலைப்பட்சமான நான்கு மாதகால யுத்த நிறுத்தம் முடிவுக்கு கொண்டு வரப் பட்டமையினால் சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதமடையாது.

இவ்வாறு தகவல் தொடர்புப் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்கம் தெரிவித்துள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

புலிகளின் யுத்த நிறுத்தம் முடிவுற்றதையடுத்து தற்கொலைத் தாக்குதல்கள் இடம் பெறலாம் என்ற அச்சத்தினால் படையினர் உஷார் நிலையிலிருப்பதாக வெளியான செய்திகளைஅவர் மறுத்ததுடன்,

நோர்வேயின் சமாதான முயற்சிகள் முடிவடையும் வரை தற்கொலைத் தாக்குதல்கள இடம்பெறமாட்டாதென அரசாங்கம் திடமாக நம்புவதாகவும் ஆரியரூபசிங்கம் உறுதி செய்துள்ளார். (உ-5)

## போலி வைத்தியர்களை கைது செய்ய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதிலுமுள்ள போலி வைத்தியர்களை கைது செய்யும் வகையில் விசேட நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ள சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

மேற் கொண்ட கணக்கெடுப்புகளின்படி 30 ஆயிரத்திற்கும் அதிகமான போலி வைத்தியர்கள் செயற்படுவது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும்,

இவர்களைக் கைது செய்வதற்குரிய அதிகாரம் சகல சுகாதார பரிசோதகர்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதாகவும் சுகாதார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## சுன்னாகம் பொலிஸார் மக்கள் அபிப்பிராயம் அறிவதில் ஆர்வம்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தினர் தமது நடவடிக்கைகள் தொடர்பாக பொது மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்களை அறிவதில் ஆர்வங்கொண்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது:

மேற்படி பொலிஸ் நிலையத்தினர் மக்கள் சிலரிடம் தமது விசாரணைகள், முறைப்பாடு எடுத்தல் தொடர்பாக அவர்கள் கொண்டுள்ள விருப்பு வெறுப்புக்களை அறிய முற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளவு, (உ-2)

## உடுவில் கோட்ட அதிபர்கள் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

உடுவில் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான விஷேட கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணியளவில் மேற்படி கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ தற்பரானந்தன் தலைமையில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது:

மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும் அதிபர்கள் இறுதியாக இடாப்பில் உள்ள மாணவர் தொகைக்கு ஏற்ப ஏற்கனவே கிடைத்த புத்தகங்கள்,இன்னும் தேவையான புத்தகங்கள்,மாணவர் வரவு பற்றிய விபரங்கள் என்பவற்றுடன் சமுகமளிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்: (உ-2)

## மூக்குக் கண்ணாடி வழங்கல்

(மந்திகை)

வடமராட்சி லயன்ஸ் கழகம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 90 பேருக்குமூக்குகண்ணாடிவழங்கும நிகழ்வு அண்மையில்கதிரவேல் பிள்ளை சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் என்-சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் பிராந்திய தலைவர் லயன் க.தணிகாசலம் மாவட்டத்தலைவர் ஆ. சிவசுவாமி ஆகியோர் கலந்து கொண்டனர்: (உ-23)

## பண்ணிசைப் போட்டி

[நல்லூர்]

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய ருத்ராந்த மஹோற்சவத்தை யொட்டி இணுவில் திருநெறியதமிழ்மறைக் கழகத்தினால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் இந்துக்கல்லூரியில பண்ணிசைப் போட்டி நடத்தப்படவுள்ளது

ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு மத்தியபிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றியீட்டும் மாணவர்க்குத் தங்கப்பதக்கமும் 2ஆம் 3ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்குச் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன; [உ-103]

## கலை விழா

[யாழ்ப்பாணம்]

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் நடத்தும் பாடசாலை நுண்கலைமன்றக் கலைவிழா நாளை சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு உரும்பிராய் கலை அரங்கத்தில் நடைபெறவுள்ளது

அதிபர் ஆ.சி நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு,கலைப் பேரரசு ஏ.ரி பொன்னுத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார் [செ]

## விஷஜந்து தீண்டியது

(மந்திகை)

நித்திரையில் இருந்த வேளை பூரான் கடிக்கு இலக்கான நிலையில் அல்வாய் தெற்கைச் சேர்ந்த கிருஷ்ணானந்தம் பவிதரன் (வயது-26) என்பவர் பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையிலும்

விஷப்பாம்பு தீண்டிய நிலையில் கரவெட்டியைச் சேர்ந்தஅன்ரன் நேசரத்தினம் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப் பட்டுள்ளனர். [உ-23]

தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்
மகாநதி
ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(இ/1871)

# புலிகளிடம் கற்ற அனுபவத்தாலேயே
# அரசு யுத்தநிறுத்தம் செய்யவில்லை
## பிரதமர் ரட்ணசிறி தெரிவிப்பு

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்குஅரசாங்கம் தயாராக இல்லை என்றும் அவர்கள் மீதான தடை நீக்கப்பட மாட்டாது இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிரான்ஸ்ஏசியா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் வைபவத்தில்கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

முன்னைய ஆட்சியாளர்கள் அறிவித்திருந்த யுத்த நிறுத்த காலத்திலேயே விடுதலைப் புலிகள் பெருமளவுஆயுதங்களை வாங்கி குவித்திருந்தனர் இதனாலேயே விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்த போதும் அரசாங்கம் அதற்கு பதிலாக யுத்த நிறுத்தம் செய்யவிரும்பவில்லை.

இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு சாதகமான நடவடிக்கைகளை அரசாங்கம் தற்போது எடுத்து வருகிறது.

விடுதலைப்புலிகளிடம்இருந்து கடந்த காலங்களில் எழுந்த அனுபவங்களினால் அரசாங்கம் புலிகளிடம் ஒரு போதும் ஏமாற மாட்டாது என்றுபிரதமர்கூறினார். (வ-4)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகியதங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(இ/ 1872)

# ஆட்கொணர்வு மனு 18 வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)
காணாமற் போன இருவர் தொடர்பாக யாழ். மேல் நீதிமன்றில் கடந்த 2 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இரு ஆட்கொணர்வு மனுக்கள தொடர்பான விசாரணைகள் நேற்றைய தினம் நீதிபதி எஸ். வரதராசா முன்னிலையில் இடம்பெற்றன.

அரச தரப்பின் சார்பாக சட்டத்தரணி கப்டன் சமரசேகர, சட்டமா அதிபர் சார்பாக எம். கணேசராசா, காணாமற் போனோர் சார்பாக சட்டத்தரணி சாந்த அபிமன்ன சிங்கம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். வரதராசா, வழக்குத் தொடர்பான சட்ட ஆலோசனைகள், சமர்ப்பணங்களை அடுத்த மாதம் 18 ஆம திகதிக்கு முன்பதாக முன்வைக்குமாறு கட்டளை பிறப்பித்ததுடன், வழக்கினை 18 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார்.

கடந்த 1996 ஆம் ஆண்டு நாவாந்துறையில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது கைதுசெய்யப்பட்ட மாணவனான பொன்னம்பலம் கண்ணதாசன்.

சரசாலை தெற்கைச் சேர்ந்த கார்ச்சாரதியான நடராசா அகிலராசன் ஆகியோர் தொடர்பான விவரங்களை கோரி அவரவர் உறவினர்களால் யாழ் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது ஆள் கொணர்வு மனு இது வென்பது குறிப்பிடத்தக்கது. (உ-6)

## இளைஞனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)
ஆனைக்கோட்டை குளப்பிட்டியைச் சேர்ந்த இ.சத்தியரூபன் (வயது 18) என்ற இளைஞனைக் கடந்த 22ஆம் திகதி முதல் காணவில்லையென மனித உரிமைஆணைக் குழுவிடம முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-10)

## கைதான இருவரும் சி. ஐ. டி. யிடம்

(கொழும்பு)
கொழும்பு ஜனாதிபதி மாவத்தையில் பழையவங்கிக் கட்டிடத்திற்கு அருகேகடந்த புதன் கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்புச்சம்பவத்தை அடுத்து கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் மேலதிகவிசாரணையின்பொருட்டு சி. ஐ. டி. பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (வ)

## வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]
அராலி ஆகாயக்குளம்விநாயகர் தேவஸ்தானவருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை மு.ப 11.00மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 6ம், 7ம்திகதிகளில் தேர், தீர்த்தஉற்சவங்கள்இடம்பெறும். [உ-24]

## நோயாளியைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)
கடந்த 22ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சுந்தரம்கணேசலிங்கம் (வயது 47) என்ற நோயாளி நேற்றைய தினம் காணாமல் போயுள்ளார்.

பத்தாம் வார்ட்டிலிருந்து நோயாளிகாணாமல்போனது பற்றி பொலிஸாருக்கும், மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கும் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. (ந- 10)

## கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]
இணுவில் தெற்கு பரமானந்தவல்லிஅம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று காலை 7மணிக்கு நடைபெறும். [ந]

## சுட்டுகொலை

புறக்கோட்டைப் பகுதியில் நேற்றுஒருவர் இனந்தெரியாத துப்பாக்கிநபர்களால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப் பட்டவர் பாதாளஉலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

**அக்கினி . . . .**
தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவநடவடிக்கையின் போது புலிகளின் பலத்த எதிர்த்தாக்குதல்களை படையினர் எதிர்கொண்டதாகவும் இதனை விமானப் படையினதும் பீரங்கிப்படையினதும் உதவியுடன் முறியடித்த தாகவும் விசேட ஊடகத்தகவல் நிலையம அறிவித்துள்ளது. [வ]

**அக்கினிச்சுவாலை-1**
நாகாகோயில பகுதிகளில் இந்த பெரும் எடுப்பில் கடல், ஆகாயப் படையின் உதவியுடன் ஆனையிறவை நோக்கி முன்னேறுவதற்கு மேற்கொண்ட ''அக்கினிச் சுவாலை-1'' படைநடவடிக்கையின் போது 300இராணுவம பலியானதாகவும், 1200 பேர் காயமடைந்துள்ளதாகவும், டாங்கிகள் அழிக்கப்பட்டு இராணுவத்தரபபிற்கு பெருஞ் சேதம ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

**அரசாங்கம். :**
எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்குச் சென்ற 10 பேர் கொண்ட ஆயர் குழு நேற்று நண்பகல் 1.30 மணியளவில் வவுனியா வந்து சேர்ந்தனர்.

ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மேலும் தகவல் தருகையில்;

தமிழீழ விடுதலைப் புலிகள் எப்பொழுதுமே சமாதானப் பேச்சுவார்த்தையில் ஆர்வம் கொண்டவர்களாகவும் சமாதானத்திற்கு தயாராக உள்ளதாகவும் உள்ளனர். இதற்கு நல்லெண்ணவெளிப்பாடாக கடந்த நான்குமாதமாக ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை மேற் கொண்டிருந்தார்கள். இக்காலத்தில் எந்தவிதமானபலனும் ஏற்படவில்லையென சு. ப. தமிழ்ச்செல்வன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

யுத்த நிறுத்த காலத்தில் தமக்கு மாசு கற்பிக்கும்வகையில் நாம் பலவீனமடைந்து விட்டோம் என்று அரசு பிரச்சாரம் செய்தது. என்னும் நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு புலிகள் எந்த விதத்திலும் மாறுபட்டவர்கள் அல்ல என்றும் சு. ப. தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியதாகவும் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சு. ப. தமிழ்ச்செல்வனுடனான ஆயர்களின் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரதிநிதிகளான புலித்தேவன், சுதா, ஜோர்ஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ)

**தீர்மானங்கள் . . .**
நோர்வேயின்சிறப்புப்பிரதிநிதி எரிக்சோல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இணையத் தளமொன்றில் நேயர்களினால்கேட்கப்பட்ட கேள்வியொன்றிற்குப் பதில் அளித்த அவர் மேலும்தெரிவிக்கையில் இவ்விடையத்தில் நோர்வேயினால் எந்தவொரு வற்புறுத்தல்களும் கொடுக்க முடியாதுஎன்றார்.

தமிழர்விடுதலைக் கூட்டணி உட்படபெரும்பாலான தமிழ்க்கட்சிகள் விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக அங்கீகரித்துள்ளனர்.

அரசு-விடுதலைப்புலிகள் இருதரப்பும் கேட்டுக்கொண்டால் யுத்தத்தின்பின்பு மேற்கொள்ளப்படவிருக்கும் புனரமைப்பு வேலைகளுக்கு நோர்வேயினால் சர்வதேச சமூகத்திடமிருந்து உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் சொல்ஹெய்ம் மேலும்தெரிவித்தார்.

# தென்மராட்சிவலயத்தில் ஆசிரியர்நியமனக்கடிதம்

(மந்துவில்)
தேசிய கல்வியற் கல்லூரி டிப்ளோமா முடித்து வெளியேறிய தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஏழுபேருக்கு ஆசிரியர் நியமனக் கடிதங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ளன.

இந் நியமனக் கடிதங்களை உரியவர்கள் வந்து பெற்றுக் கொண்டுகடமைகளைபொறுப் பேற்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். ஏழுபேரின் பெயர் விபரம் வருமாறு

★ஜெ ஜெயந்தன்[சாவகச்சேரி]

★சி.சுபாசினி [கொடிகாமம்]
★சி.ஜெயரூபவதி [மிருசுவில்]
★சி.பிரபாகரன் [வரணி]
★க.சுதர்சினி [மட்டுவில் தெற்கு]

★செ.ஜெயந்தன் [வரணி]
★கு.சுதாஜினி[சரசாலை]. (ந-39)

# மன்னார் கடற்பரப்பில் கடற்படை மீது தாக்குதல்
## ஒருவர் பலி; இருவர் காயம்

(வவுனியா)
மன்னார் பள்ளிமுனைக் கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தகடற்படையினர் மீது நேற்று அதிகாலை கடற்புலிகள் நடத்திய தாக்குதலின்போது ஒரு கடற்படை வீரர் பலியாகியும் இருவர்படுகாயமடைந்துள்ளதாக மன்னார் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்த கடற்படை வீரர்கள் இருவரும் மன்னார் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இறந்த ஒருவரின் சடலமும் மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின்போது கடற்படையினரின் படகும் சேதம்அடைந்ததாகவும்கடற்புலிகளுடைய படகு அழிக்கப்பட்டதாகவும், கடற்புலி ஒருவருடைய சடலம் கடற் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

புலிகள் யுத்த நிறுத்தத்தினை வாபஸ் பெற்றபின்னர் கடற்படையினர்மீதுநடத்திய முதலாவது தாக்குதல்இதுவாகும். (வ)

# கொழும்பு- யாழ்விமான பயணச் சீட்டு மோசடி
## அதிகாரி உட்பட 4பேர்கைது

(கொழும்பு)
பாதுகாப்பு அனுமதிபெறாதவர்களுக்கு கொழும்பிலிருந்துயாழ்ப்பாணம்வருவதற்கான பயணச் சீட்டுக்களை வழங்கிய விமானப் படைஅதிகாரி ஒருவரும் பயணச்சீட்டு வழங்கும் அலுவலகத்தில் பணிபுரியும் மூன்று உத்தியோகத்தர்களும் சி. ஐ. டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை உள்ளூர்விமான சேவையில் ஈடுபடும் விமானம் ஒன்றை விடுதலைப் புலிகள் தகர்க்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கு இவர்கள் உடந்தையாக இருந்தார்களென்றும் கைது செய்யப்பட்டவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

# மன்னார் சம்பவத்தை கண்டித்து மடுவில் ஆர்ப்பாட்ட பேரணி

(வவுனியா)
மன்னார் உப்புக்குளம் பகுதியில் இரண்டு இளம்குடும்பப் பெண்கள் பாலியல் வல்லுறவுச் சம்பவத்திற்குள்ளாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து நேற்று மடுவில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் பேரவை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஐ. நா. செயலாளர் அனானுக்கு அனுப்புவதற்காக மகஜர் ஒன்றையும் தம்மிடம் தந்ததாக வன்னிக்குச் சென்று திரும்பிய ஆயர் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இடம் பெயர்ந்து வாழும் சுமார் 13 ஆயிரம் மக்களும் தம்மை சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்குமாறும் தமது அவல நிலையை அரசிற்கு தெரியப் படுத்துமாறும் ஆயர் குழுவிடம் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (வ)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், 7ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (செ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ நிறுவனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது